**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II**
**SRIVILLIPUTTUR.**

C.C. No: 417 of 2022

DATE :10.05.2023

Depositions of witness for Prosecution

PW: 13

| | | | |
|---|---|---|---|
| Name | துரைராஜ் | Caste | |
| Father/Husband's Name | இளங்கோ | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of May 2023 Time: 1.08- 3.00 P.M

**முதல் விசாரணை –**

1) நான் மதுரை மாநகர் அண்ணாநகர் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன், கடந்த 10.08.2013 ம் தேதி மல்லி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது சுப்பிரமணியத்தேவர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்றுக்கொண்டு காவல் நிலைய குற்ற எண். 181/2013 பிரிவுகள் 3, TNPPDL Act ன்படியும், 448, 506(2) இதச ன் படியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2) புகார் மனு மற்றும் முதல் தகவல்அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று மாலை 7.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலசுப்பிரமணியன், ஜெயபால் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். (**அந்த வரைபடம் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் 11.08.2013 ம் தேதி காலை 9 மணியளவில் சாமிநத்தம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து 1 முதல் 3 எதிரிகளை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3) இவ்வழக்கின் 4 ம் எதிரி அன்று காலை 11 மணியளவில் வழக்குச்சொத்தான JCB யுடன் நிலையம் ஆஜரானவரை கைது செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், சாட்சிகள் சுப்பிரமணியன், முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் ஜேசிபியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.கைப்பற்றிய வழக்குச்சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். (**அந்த படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அந்த வாகனத்தை மனுதாரர் மனுச்செய்து இடைக்கால

பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். அந்த வாகனத்தின் புகைப்படம் தான்தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது (**அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பின்னர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பிறகு 06.02.2014ம் தேதி நான் பணி மாறுதல் ஆனதால் வழக்குக்கோப்பை சார்பு ஆய்வாளர் மகேஷ்வரி வசம் ஒப்புவித்தேன். இது சம்பந்தமாக விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

1) முதல் தகவல் அறிக்கையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நெறிவுறுத்தும் நீதிப்பேராணை தாக்கல் செய்திருப்பதாக சொல்லியுள்ளார் அந்த நீதிப்பேராணை யை பார்வையிட்டேனா என்றால் பார்த்தேன். அந்த நீதிப்பேராணையில் எதிரிகளுக்கு எதிராக ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் மனுவின் நகலைத்தான் காண்பித்தார்கள் உத்தரவை காண்பிக்கவில்லை. எனது விசாரணையில் எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்ததா அல்லது அது தீர்ப்பாகி இருந்ததா என்பதை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் நிலுவையில் இருப்பதாக சொன்னார்கள்.

2) எனது விசாரணையில் எதிரிகளுக்கும், புகார்தாருக்கும் இடையே வருவாய் கோட்டாட்சியரிடம் வழக்கு நிலுவையில் இருந்ததா அல்லது அது தீர்ப்பாகி இருந்ததா என்பதை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் நிலுவையில் இருப்பதாக சொன்னார்கள். மேற்கண்ட வழக்கு நடைமுறைகள் என்னவானது என்று தெரிந்துகொள்ள வேண்டிய கடமை எனக்கு உள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் புகார்தாரர் வேறு வீடு கட்டி சென்றுவிட்டதாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் அவர் புது வீட்டில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

3) 2008லேயே அந்த இடம் விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரிக்கு தான் பாத்தியப்பட்டது என்று தீர்ப்பாகி விட்டது என்று சொன்னால் தெரியாது. மேற்கண்ட வழக்குகளின் தீர்ப்பு என் முன்பாக விசாரணையின் போது கொடுத்திருந்தால் என்ன செய்திருப்பேன் என்றால் எதிரிகள் பக்கம் ஆவணம் இருந்திருந்தால் வழக்கு பதிவு செய்திருக்க மாட்டேன். உரிமையியல் வழக்கில் தீர்ப்பு வந்தவுடனே இந்த வழக்கிற்கு முன்னதாகவே எதிரிகள் வசம் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார்கள்என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக மறைத்து சொல்கிறேன் என்றால் இல்லை.

4) சாட்சி அழகுச்சாமியை 2 மாதம் 10 நாட்கள் கழித்து தான் விசாரித்துள்ளேன் என்றால் சரிதான் 20.11.2014ல் விசாரித்தேன். நான் சரிவர ஆவணங்களை பார்வையிடாமலும், சாட்சியங்களை சேகரிக்காமலும் முதல்கட்ட விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**